DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.143/2017

**prosecution witness: PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : சரண்யா | தொழில்/ பதவி | : | தலைமை பெண் காவலர், NIB CID, Ramanathapuram |
| க/பெ. | : இளையராஜா | வயது | : | |
| ஊர் | : இராமநாதபுரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>**21.07.2026**</u>

( 1, 2 எதிரிகள் மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**1ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

1. சம்பவத்தன்று கடல் அட்டைகள் என்ன நிறத்தில் இருந்தன என்றால் சாம்பல் நிறத்தில் இருந்தது. கைப்பற்றப்பட்ட அனைத்து கடல் அட்டைகளும் சாம்பல் நிறத்தில் இருந்ததா கருப்பு நிறத்தில் இருந்ததா என்றால் பாதி சாம்பல் நிறத்திலும் பாதி கருப்பு நிறத்திலும் இருந்தது. வெள்ளை நிறத்தில் அட்டை இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. சாம்பல் நிறத்தில் 35 கிலோ கடல் அட்கைள் இருந்தன. அது போல் 10 கிலோ கருப்பு நிறத்திலும் ஆக மொத்தம் 45 கிலோ இருந்தது. அத்தாட்சியில் சாம்பல் நிறத்தில் உள்ளது 35 கிலோ, கருப்பு நிறத்தில் உள்ள கடல் அட்டைகள் 10 கிலோ என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நிறத்தை குறிப்பிடவில்லை. 45 கிலோ கடல் அட்டைகள் எத்தனை சாக்குபையில் வைத்திருந்தார்கள் என்றால் 2 கேன்களில் வைத்திருந்தார்கள். நான் கையொப்பம் செய்த அத்தாட்சி மகஜரில் 2 கேன்களில் கடல் அட்டைகள் வைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 கேன்களில் எழுத்துக்கள் ஏதேனும் இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. அந்த 2 கேன்கள் சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடியதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. சம்பவத்தினத்தன்று நான் காவல் ஆய்வாளருடன் சேர்ந்து ரோந்து பணி செய்யவில்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னிடம் சம்பவத்தன்று காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் வருமாறு தகவல் கூறினார்

என்றால் சரிதான். நான் ஆய்வாளர் சொன்னவுடன் சுமார் 11.05 மணிக்கு சம்பவ இடம் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பே ஆய்வாளர் சம்பவ இடத்தில் இருந்தார். அவருடன் எத்தனை நபர்கள் உடன் இருந்தார்கள் என்றால் 3 காவலர்கள் சம்பவ இடத்தில்இருந்தார்கள். அந்த 3 காவலர்கள் எங்கிருந்து சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. நான் சம்பவத்தன்று எதிரியின் வீட்டிற்குள் சென்று சோதனை செய்தீர்களா என்றால் எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் எங்கு எங்கு ரோந்து சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நானும் காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் எதிரிகளை 11.15 மணிக்கு கைது செய்து செய்துவிட்டோம் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் எத்தனை மணிக்கு அத்தாட்சி தயார் செய்தார் என்றால் 11.15 மணிக்கே அத்தாட்சி தயார் செய்துவிட்டார். அத்தாட்சி தயார் செய்த பின்பு நானும் காவல் ஆய்வாளரும் எதிரிகளுடன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. 11.15 மணிக்கு பிறகு எதிரிகளுடனும் அத்தாட்சி மகஜர் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் நேராக மண்டபம் வனச்சரகத்திற்கு சென்றோம் என்றால் 1.30 மணி நேரம் கழித்துத்தான் வனக்சசரக அலுவலகத்திற்கு சென்றோம்.

4. வனச்சரக அலுவலகத்திற்கு 1.00 மணிக்கெல்லாம் காவல் ஆய்வாளர் மற்றும் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சென்று காவல் ஆய்வாளர் ஒப்படைத்தார் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை இருக்கலாம். 2 கேன்களில் உள்ள கடல் அட்டைகளை அவிக்க பயன்படுத்தப்பட்ட பாத்திரங்களை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. கடல் அட்டைகளை எடை போட காவல் ஆய்வாளர் தராசை கொண்டு வந்தாரா என்றால் தராசை எடுத்துக்கொண்டு சென்றோம்.

5. தராசுடன் சேர்த்து படிக்கல்லை எடுத்துச் சென்றீர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட அட்டைகள் சரியாக 45 கிலோ இருந்ததா என்றால் சரியாக இருந்தது. அவிக்க பயன்படுத்தப்பட்ட சிலிண்டர் கைப்பற்றப்பட்டதா என்றால் சரிதான் அது கமர்சியல் சிலிண்டரா அல்லது வீட்டிற்கு பயன்படுத்தக்கூடியதா என்றால் வீட்டிற்கு பயன்படுத்தக்கூடியது ஆகும். அந்த சிலிண்டர் சிவப்பு நிறத்தில் இருந்தது.

அத்தாட்சி மகஜலில் சிவப்பு நிறம் கொண்ட சிலிண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நிறம் குறிப்பிடப்படவில்லை.

6. நான் சம்பவ இடம் செல்லும்போது எதிரியின் வீட்டின் அருகில் நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். பொதுமக்கள் யாரும் அந்த நேரத்தில் இல்லை. காவல் ஆய்வாளர் பக்கத்து வீடுகளில் இருந்தவர்களை சாட்சியாக அழைத்து இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆய்வாளர் கூப்பிட்டார் யாரும் வெளியே வரவில்லை. மேற்படி சம்பவம் நடைபெற்றது யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் காவல் ஆய்வாளரும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்துக்களை சொன்ன இடத்தில் வைத்து சொன்ன தேதியில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ இடத்திற்கு தற்செயலாக சென்றீர்களா அல்லது ரகசிய தகவல் கிடைத்து சென்றீர்களா என்றால் ரகசிய தகவல் கிடைத்து சென்றோம். அந்த ரகசிய தகவல் கிடைக்கும் போது 11.00 மணி இருக்கும். அப்போது காவல் ஆய்வாளர் மற்றும் நான் மண்டபம் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் இருந்தேன். அத்தாட்சியில் கையெழுத்து 11.15 மணிக்கு தயார் செய்யப்பட்டபோது தான் கையெழுத்து செய்தேன்.

2. கடல் அட்டைகளை பார்த்தவுடன் அது அரசால் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள்தான் என்று சொல்லமுடியுமா என்றால் சொல்ல முடியும். அதற்காக நான் தனிப்பயிற்சி ஏதும் எடுக்கவில்லை. அரசால் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் அரசால் தடை செய்யப்படாத கடல் அட்டைகள் என வெவ்வேறு வகையை சேர்ந்தது இருப்பது என்பது பற்றி எனக்கு தெரியாது. கடல் அட்டைகளை கைப்பற்றியவுடன் மண்டபம் வனச்சரக அலுவலகத்தில தகவல் கொடுத்தோமா என்றால் நான் கொடுக்கவில்லை. அது பற்றி எனக்கு தெரியாது.

3. அரசால் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளா தடை செய்யப்படாத கடல் அட்டைகளா என்று எனக்கு தெரியாமல்தான் நான்

ஆய்வாளர் கேட்டதற்கிணங்க நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். 2 வது எதிரி சைபுல்லாவிடம் எந்த வித சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இரண்டு எதிரிகளும் அங்குதான் இருந்தார்கள். 2 வது எதிரியின் வீடு அது அல்ல என்றால் சரிதான்.

4. எங்களை பார்த்தவுடன் எதிரி எந்த பக்கம் எவ்வளவு துாரம் ஓடினார்கள் என்றால் 1 வது எதிரி எங்களை பார்த்தவுடன் 50 மீ துாரம் ஓடினார். 2 வது எதிரி ஓட முயற்சிக்கவில்லை. 1 வது எதிரியை நான்தான் விரட்டி பிடித்தேன். எதிரி வீட்டிற்கு 50 மீ துாரத்தில் உள்ள கருவேலங்காட்டில் வைத்து பிடித்தேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் உண்மையில் அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் 2 வது எதிரி ஓடியிருப்பார் என்றால் சரியல்ல. கடல் அட்டைகளை அவிக்க வேண்டும் என்றால் பிளாஸ்டிக் கேன்களிலோ பிளாஸ்டிக் பாட்டில்களிலோ அவிக்க முடியாது என்றால் சரிதான். அவித்து எடுத்து வைத்திருக்கலாம்.

5. இரும்பு பாத்திரங்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரியைப் பொருத்தவரையில் சம்பவ இடத்தில் எங்களை பார்க்கவில்லை. விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்திற்கு வரவழைத்து பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.07.21 09:07:20 +0530